

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நேற்று, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, முன்னிலையில் நாகர்கோவில் அண்ணா பேருந்துநிலைய ஆவின் பாலகத்தில் பாதாம் மிக்ஸ் பவுடர் பாக்கெட்டை அறிமுகப்படுத்தினார். உடன் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர் என்.சுரேஷ்ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் உட்பட பலர் உள்ளார்கள்.





செங்கல்பட்டு மாவட்டத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, ஒன்றியக்குழு தலைவர் எல்.இதயவர்மன், மாவட்ட துணைச் செயலாளர் து.மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச்செழியன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

**ம.கிரகாம்பெல் தலைமை!**

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – இரா.ஆவுடையப்பன் சிறப்புரை!

நெல்லை, ஆக.28-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நி கழ்வில் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் (25.08. 2025) அன்று மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம் பெல் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் என். சுரேஷ்ராஜன் (நாங்குநேரி) எம்.ஜோசப்ராஜ் (அம்பாசமுத்திரம்) சிவராஜ் (இராதாபுரம்) தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: சா.ஞானதிரவியம்,ஆ.பிரபாகரன், பிரபாகரபாண்டியன்,சித்திக், மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம்,கே. கணேஷ்குமார் ஆதித்தன் மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல்,மாவட்ட துணை செயலாளர்கள் நம்பி,மைக்கேல், தமயந்தி, ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்று 2026 தேர்தல் குறித்து பேசியதாவது.

**'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கம்**

மூலம் தமிழகம் முழுவதும் 2 கோடியே 80 லட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதற்காக உழைத்த மாவட்ட செயலாளர்கள், ஒன்றியசெயலாளர்கள்,நகர,பேரூர், கழகச் செயலாளர்கள், கழகத் தொண்டர்களுக்கு மற்றும் தொகுதி பொறுப்பாளர்கள்,சார்பு அணியினர், வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அறுவடை செய்ய வேண்டிய நாள் 2026 ஆம் ஆண்டு,நமது முதலமைச்சர் அவர்களின் ஏராளமான திட்டங்களை மக்களுக்காக அறிவித்து செயல்படுத்தி உள்ளார்கள்.'உங்களுடன் ஸ்டாலின்' 'நலம் காக்கும் ஸ்டாலின்' 'தாயுமானவர் திட்டம்' போன்றவைகள் மக்களை நேருக்கு நேர் சந்திக்கும் நிலையில் உள்ளதால் இந்தத் திட்டம் நமக்கு மிகுந்த தெம்பை தந்துள்ளது. குறிப்பாக கலைஞர் உரிமைத் தொகைக்கு அதிகமான விண்ணப்பங்கள் வருகின்றது. எனவே துணை முதல்வர் அவர்களை சந்திக்கும் பொழுது இதுவரை கிடைக்காத மகளிர்க்கும் கொடுத்து விட வேண்டும் என வலியுறுத்தி உள்ளேன். நெல்லையில் உள்ள 5 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும். அதற்காக தொண்டர்கள் உழைக்க வேண்டும்.கட்சித் தேர்தல் என்றால் எதிரணியாகவும், பொதுத்தேர்தல் என்றால் ஓரணியில் நின்று எதிரிகளை ஓட ஓட விரட்டும் இயக்கம்தி.மு.க.நமக்கும் விமர்சனம் செய்யும் பத்திரிகைகள் கூட தேர்தல் வந்து விட்டால் தி.மு.க.வினர் கடுமையாக உழைப்பார்கள் என்று கூறும் அளவிற்கு நாம் பெயர் பெற்று உள்ளோம்.

2026 தேர்தலில் நமது முதலமைச்சர் அவர்கள் யார் வேட்பாளராக கையை காட்டுகிறாரோ அவரை கலைஞர் அவர்களாக,நமது முதல்வர் மு.க ஸ்டாலினாக அவர்களாக நினைத்து பணியாற்றி வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

முன்னதாக நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் 2026 தேர்தலை முன்னிட்டு எவ்வாறு களப்பணி ஆற்ற வேண்டும் என்றும்,'ஓரணியில் ஸ்டாலின்' உறுப்பினர் சேர்க்கை குறித்தும் எடுத்துரைத்து,சிறப்பாக பணியாற்றிய கழக நிர்வாகிகளை பாராட்டி பேசினார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் அயூப்கான்,கணேசன், சாந்தி சுபாஷ்,கனகராஜ்,பரமசிவ அய்யப்பன் ஒன்றிய செயலாளர்கள்

சிவனுபாண்டியன்(எ) பரணிசேகர், முத்துபாண்டி (எ) பிரபு, முத்துகிருஷ்ணன், சுடலைக் கண்ணு, ராஜன்,செல்வகருணாநிதி, போர்வெல் கணேசன்,சுபாஷ் சந்திரபோஸ், எரீக் ஜூடு, ஜோசப் பெல்சி,நகர செயலாளர்கள்

கணேசன்,சுப்பிரமணியன் (எ) மணிசூரியன், பேரூர் செயலாளர்கள்

முத்துகணேசன்,இசக்கி பாண்டி, சுப்பையா, மணிஷா செல்வராஜ், டி. வானுவாமலை,முருகையா பாண்டியன், சிந்தாமதார், சேதுராமலிங்கம்,தமிழ்வாணன், அயூப்கான் அணி அமைப்பாளர்கள்

இளைஞர் அணி ஜான் ராபிந்தர், மாணவர் அணி அலெக்ஸ் அப்பாவு, மகளிர் அணி மல்லிகா அருள், மகளிர் தொண்டர் அணி ஆண்டனி பிரேமா,வழக்கறிஞர் அணி செல்வசூடாமணி, தகவல் தொழில்நுட்ப அணி பிரேம்ஆனந்த், விவசாய அணி மாடசாமி,வர்த்தக அணி ரஹ்மான்,விவசாய தொழிலாளர் ராஜ சங்கரலிங்கம், இலக்கிய அணி நெல்லைமணி, பொறியாளர் அணி அருணன், சிறுபான்மை நலஉரிமைபிரிவு அணி திருப்பதி ஜெயசீலன்,சுற்றுசூழல் அணி முருகன் தொண்டர் அணி முருகன்,கலை இலக்கிய பேரவை அணி நெடுஞ்செழியன்,அயலக அணி பீர்மைதீன்,அமைப்புசாரா அணி பிரகாஷ்,மருத்துவர்அணி கார்த்திக்குமார்.இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தில்லை ராஜா,அருள் ராஜ் டார்வின், மனோஜ்குமார்,ஆகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய உழைப்பினால் தொழில்துறையில் தமிழ்நாடு முதல் மாநிலமாகவும், பொருளாதார ரீதியாக அதிவேக முன்னேற்றமும்,கல்வியில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும் தமிழ்நாட்டின் முன்னேற்றம் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியே மக்களின் வளர்ச்சி,தமிழ்நாட்டின் வளர்ச்சியும், மக்களின் வளர்ச்சியுமே தனது குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வருகின்ற நம்முடைய தலைவர் தளபதியார் அவர்கள் உழைப்பால் தேர்தல் அறிக்கையில் கூறிய 505 வாக்குறுதி 95 சதவீதம் நிறைவேற்றி உள்ளார்கள். தலைவர் அவர்கள் இரவு, பகல்,பாராது கண் துஞ்சாது மக்களுக்காக உழைப்பதால்,தமிழக மக்கள் அனைவரும் முதலமைச்சர் அவர்களை எண்ணி பாராட்டி புகழ்ந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் நிறைவேற்றபடுகின்ற மக்கள் நலத்திட்டங்களை பார்த்து, மற்ற மாநிலங்களும் தங்கள் மாநிலங்களில் அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்காக திட்டங்களை தீட்டி முயன்று வருகிறார்கள். இதுபோன்று மாநிலங்களுக் கெல்லாம் உதாரணமாக தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

அந்நிய முதலீடு ஈர்க்க பயணம் செல்லும் முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களுக்கு பாராட்டு தொழில்துறையில் தமிழ் நாட்டை முதலிடம் ஆக்கி அதன் மூலம் தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டு முதலீட்டை கொண்டு வருவதற்காக ஜெர்மன் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு வருகின்ற ஆகஸ்ட் 30ம் தேதி முதல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தொழில் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பல ஆயிரம் முதலீட்டை ஈர்க்க சுற்றுப்பயணம் மேற்கொண்டு முத்தமிழறிஞரால் உழைப்பிற்கு பாராட்டு பெற்ற நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களை இக்கூட்டம் வாழ்த்தி வணங்கி போற்றி பாராட்டுகிறது.முதலமைச்சர் அவர்கள் பயணம் வெற்றிபெற இக்கூட்டம் பாராட்டுதல்களும், வாழ்த்துகளும் தெரிவித்துக் கொள்கிறது.

பரணி பாயும் தாமிரபரணி மாவட்டத்தை திட்டங்களால் தரம் உயர்த்திய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியும்,பாராட்டும்

முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியில் வேளாண்துறை வளர்ச்சி, வேளாண்மைக்கு 2 இலட்சம் பேருக்கு இலவச மின்சார இணைப்பு, விவசாய கடன் தள்ளுபடி, பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், கல்லூரி மாணவியருக்கு உதவித்தொகை ரூ.1,000 மும்,அதுபோன்று மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 ம் வழங்குவதோடு மட்டு மல்லாமல் பொதுமக்களுக்கு அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, போக்குவரத்துக்கு ஏற்ற சாலை வசதிகள், தரமான சுகாதார வசதி, மிகச்சிறந்த மருத்துவமனைகள், திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு, பள்ளி,கல்வித்துறையில் வளர்ச்சி மற்றும் அனைத்து வழித்தடங்களுக்கும் போக்குவரத்து வசதிகள், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என பல்வேறு திட்டங்கள் கிடைத்து வருகிறது. இதன் காரணமாக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர்.

மேலும் திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கும் வாழ்வாதாரத்துக்கு தேவையான அடிப்படை வசதிகளான தரமான தார்சாலை வசதி,தெருவிளக்கு வசதி, குடிநீர் வசதி,மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தந்து திருநெல்வேலி மாவட்ட மக்களின் நலனை பாதுகாத்து வருகின்ற திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதி யார் அவர்களுக்கும் இக் கூட்டம் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஒன்றிய,நகர,பேரூர், கிளை, வார்டுகளில் கழக பொது உறுப்பினர் கூட்டங்கள் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் தலைமையில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்கள் ஆகியோர்கள் மத்தியில் எடுத்துக்கூறுகின்ற வகையில் ஒன்றிய, நகர, பேரூர்களில், கிளை, வார்டு கழக பொது உறுப்பினர் கூட்டங்களை நடத்த இக்கூட்டம் ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்களை கேட்டுக் கொள்கிறது.

செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி கரூரில் நடைபெற உள்ள கழக "முப்பெரும் விழா" நிகழ்ச்சிக்கு, நமது திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க இக்கூட்டம் தீர்மானம் செய்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர் களின் இல்லத்துக்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருட்களை விநியோகம் செய்யும் 'தாயுமானவர் திட்டத்தை' தொடங்கி வைத்த முதலமைச்சர் அவர்களுக்கு இக் கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

இலவசமாக ஏழை,எளிய மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே இலவச சிறப்பு மருத்துவ பரிசோதனை மற்றும் நோய்களை ஆரம்ப நிலையி லேயே கண்டறிந்து உடனடியாக உரிய சிகிச்சை அளிப்பதற்காக "நலம் காக்கும் ஸ்டாலின்" என்ற மருத்துவ சேவை திட்டத்தை அறிமுகப்படுத்தி முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள், திட்டங்கள் அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை அறிவித்த முதலமைச்சர் அவர்களை இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

கழகத் தலைவர் திராவிட நாயகர் கட்டளைப் படி ஓரணியில் தமிழ்நாடு' முழக்கத்தை ஒவ்வொரு குடும்பத்திலும் ஒலிக்க வைத்து உறுப்பினர் சேர்க்கையில் நமது திருநெல்வேலி கிழக்கு மாவட்டம் இலக்கை முடிக்க உறுதுணையாக பணியாற்றிய ஒன்றிய,நகர மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், BLA2, BDA.,தகவல் தொழில்நுட்ப அணி, BLC உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவருக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**BLA 2 BLC சரிப்பார்த்தல்**

தலைமைக் கழகத்தால் வழக்கப்பட்டுள்ள BLA2 மற்றும் BLC பட்டியல் தங்கள் வசம் கொடுக்க பட்டுள்ளது. அதனை சரிப்பார்த்து ஏதேனும் திருத்தம் இருப்பின் அதனை திருத்தம் செய்து வருகின்ற 05.09.2025 அன்றுக்குள் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட கழகத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்**

2026-ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலில் அபார வெற்றி பெற தீவிரமாக வாக்காளர் பட்டியலை துல்லியமாக தவறில்லாமல் சரிப்பார்த்து போலி வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் இடம் பெறாமலும்,உயிரோடு இருக்கும் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தாலும், புலம்பெயர்ந்த வாக்காளர்கள் பெயர்கள் இருந்தாலும் உடனடியாக நீக்கம், திருத்தம் செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்க இக்கூட்டம் ஒன்றிய,நகர மற்றும் பேரூர் செயலாளர்களை கேட்டுக் கொள்கிறது.

**வாக்குத் திருட்டை தடுத்திடுவோம்!**

பாசிச பா.ஜ.க.அரசு தனது கைபாவையாக சி.பி.ஐ, அமலாக்கத்துறை மற்றும் வருமானவரித்துறை போன்ற அரசு இயந்திரத்தை எதிர்கட்சிகளை மிரட்டும் எந்திரமாக பயன்படுத்தி வந்தது. தற்போது உச்சபட்டசமாக இந்தியத் தேர்தல் ஆணையத்தையே பா.ஜ.க.வின் சார்பு அணி போல் மாற்றி வாக்கு திருட்டை செயல் படுத்திவருகிறது.குடிமக்களின் வாக்குரிமையைப் பறிக்கும்தேர்தல் ஆணையத்தின் பீகார் சிறப்புத்தீவிரத் திருத்தத்தை (SIR) எதிர்த்தும், அகில இந்திய அளவில் தேர்தல் ஆணையத்தின் துணை கொண்டு தேர்தல் களத்தில் பா.ஜ.க.வின் "வாக்குத் திருட்டை"வன்மையாக கண்டித்தும் இக்கூட்டம் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் புதல்வரும், கழகத்தலைவர் அவர்களின் சகோதரருமான மு.க.முத்து அவர்கள்,

கழக பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களின் மனைவியும், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களின் தாயார் ரேணுகா தேவி,பொதுக்குழு உறுப்பினர் ராமசந்திரன் அவர்களின் தந்தை வெள்ளத்துரை பாண்டியன் அவர்கள்,நெல்லை

கிழக்கு மாவட்ட தி.மு.க விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சு.தவசி மணிகண்டன் அவர்களின் தந்தை பாம்பே சுப்பிரமணியன் துரை சேட் அவர்கள்,

திருவேங்கடநாதபுரம் கிளைக்கழக செயலாளர் சந்திரன் அவர்களின் மனைவி ரோஜா அவர்கள்

கோபாலசமுத்திரம் மாவட்ட பிரதிநிதி கணேஷ் மாரியப்பன் அவர்களின் தாயார் ஜானகி அம்மாள் அவர்கள் ஆகியோர்களது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.





கோவை ஒண்டிப்புதூரில் இருந்து சிங்காநல்லூர் செல்லும் சாலையில் எஸ்.ஐ.எச்.எஸ் காலனி பகுதியில் 95 சதவிகதப் பணிகள் முடிவடைந்து, இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இரயில்வே மேம்பாலப் பணிகளை நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் குருமூர்த்தி, உதவி பொறியாளர் ஹரிபிரசாத் முன்னிலையில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் பார்வையிட்டார். உடன் ஒண்டிப்புதூர் பகுதி கழக பொறுப்பாளர் கஸ்தூரி அருண், 55வது வட்டக் கழக செயலாளர் ராஜேந்திரன், பகுதி அவைத் தலைவர் என்.டி. சின்னச்சாமி, கீதா செல்வராஜ், தம்பு, கனகராஜ், சிவா, ஆ.சதீஷ்குமார், கோனியம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் வி.லட்சுமணன், ஆர்.கே.கே.மணி, ஜவஹர் உள்பட கழக நிர்வாகிகள், நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பலர் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சி மேல கொட்டையூரில் உள்ள வள்ளலார் உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாநகராட்சி மேயர் கா.சரவணன் மாநகராட்சி ஆணையர் காந்திராஜன், மண்டலக் குழுத் தலைவர் கே.என்.எஸ். ஆசைத்தம்பி, பகுதிச் செயலாளர் செல்வராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பள்ளி நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.